**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**

**O.S. No. 21 / 2026**

**2026ம் வருடம் ஜூன் மாதம் 22ம் நாள் திங்கட்கிழமை**

**வா.சா.1** சாட்சியின் வாக்குமூலம் பிரமாணச்சட்டம் 1969, பிரிவு 6(1)ன்படி கிரேடு 3 பெஞ்ச் கிளார்க் திரு. வீரக்குமார் என்பவரால் உறுதிப்பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பொரோஸ் சர்ஜின் | த/பெ | எலியாஸ் |
| ஊர் | | வட்டம் | |
| சாதி | | சமயம் | |
| வயது | | தொழில் | |

**முதல் விசாரணை:–**

நான் இந்த வழக்கின் வாதி வங்கியின் முதுநிலை மேலாளர் ஆவேன். எனது முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். என்னுடைய தகவலின் பேரில் தான் தயாரிக்கப்பட்டது. எனது தரப்பு ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. கடன் விண்ணப்பம் அசல் வா.சா.ஆ.1
2. அனுமதி கடிதம் அசல் வா.சா.ஆ.2
3. கடன் ஒப்பந்தம் அசல் வா.சா.ஆ.3
4. உயிர்பிப்பு கடிதம் அசல் வா.சா.ஆ.4
5. உயிர்பிப்பு கடிதம் அசல் வா.சா.ஆ.5
6. உயிர்பிப்பு கடிதம் அசல் வா.சா.ஆ.6
7. வங்கி கணக்கு பட்டியல் உண்மை நகல் வா.சா.ஆ.7

எனது சாட்சியத்தை ஏற்றுக்கொண்டு பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

**சார்பு நீதிபதி**
**மானாமதுரை**